இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 02-12-2024

# மக்களால் நிராகரிக்கப்பட்டது யார்?

ஊடகங்களைச் சந்திக்காத பிரதமர் மோடி, திடீரென்று ஊடகங்கள் முன்னால் தோன்றி தனது திருவாயைத் திறந்திருக்கிறார். அவர் யதார்த்த உலகத்தில் இருக்கிறாரா, அல்லது கற்பனாலோகத்தில் இருக்கிறாரா எனத் தெரியவில்லை.

“அதிகாரப் பசி கொண்ட கட்சிகளை வாக்காளர்கள் பலமுறை நிராகரித்துள்ளனர். மக்கள், எதிர்க்கட்சிகளை மீண்டும் மீண்டும் நிராகரிக்க வேண்டும். மக்களால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டவர்களும், சக ஊழியர்களின் வார்த்தைகளை அலட்சியப்படுத்தியவர்களும், அவர்களின் உணர்வுகளை மதிக்காதவர்களும் நாடாளுமன்றத்தை ஆக்கிரமிக்க நினைக்கிறார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்தான் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபடுகின்றனர். நாடாளுமன்ற நடவடிக்கைகளை சீர்குலைக்க சில கட்சிகள் முயற்சிக்கின்றன. நாடாளுமன்றத்தில் மக்களுக்காக காங்கிரஸ் என்றுமே பேசியதில்லை” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி.

இவர் நாடாளுமன்றத்துக்கு எத்தனை முறை வந்துள்ளார்? நாடாளுமன்றத்தில் எத்தனை விவாதங்களில் கலந்து கொண்டிருக்கிறார்? எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு பதில் அளித்திருக்கிறாரா? தான் பதில் சொல்ல வேண்டிய நாளில் மட்டும் வருகை தந்து, தனது உரையை ஆற்றிவிட்டுச் செல்வதை மட்டுமே வழக்கமாகக் கொண்டவர் மோடி. இவர் நாடாளுமன்ற விவாதங்கள் பற்றி பேசலாமா?

தன்மீதான குற்றச்சாட்டுகளுக்கு நாடாளுமன்றத்தில் திறந்த விவாதத்தை நடத்துவதற்கு எப்போதாவது அனுமதித்திருக்கிறாரா பிரதமர் மோடி? அப்படி ஒரு விவாதம் நடந்த போது உட்கார்ந்து எதிர்க்கட்சிகளின் உரைகளைக் கேட்டுள்ளாரா? அதற்கு பதில் அளித்துள்ளாரா? இல்லை!

**கேள்வி நேரத்தின் போது ஒரு நாள் கூட பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வந்ததில்லை. பொதுவாக நாடாளுமன்றங்கள் நடக்கும் போது பிரதமரோ, அமைச்சர்களோ வெளிநாடு செல்ல மாட்டார்கள். அப்போதும் வெளிநாடு சென்றவர் தான் பிரதமர் மோடி.**

**2014 ஆம் ஆண்டு பிரதமர் ஆனார் மோடி. 2018 ஆகிய நான்கு ஆண்டுகளில் 19 நாட்கள் மட்டுமே நாடாளுமன்றத்துக்கு மோடி வந்ததாக டெல்லி உயர்நீதிமன்றத்தில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் சஞ்சய் சிங் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். அவரை முறையாக நாடாளுமன்றத்துக்கு வரச் சொல்லி உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இது, இதுவரை இருந்த எந்தப் பிரதமரும் எதிர்கொள்ளாத கேள்வி ஆகும்.**

மணிப்பூர் விவகாரத்தில் இவரை பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் இணைந்து நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபையில் கொண்டு வந்தன. அதற்கு அவர் பேசித்தான் ஆக வேண்டும். அதனால் வேறு வழியின்றி பேசினார். இது தான் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மோடி காப்பாற்றும் லட்சணம் ஆகும்.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர் அவர் தானே தவிர, ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் அல்ல. ‘400 இடங்களைக் கைப்பற்றுவோம்’ என்று நாடாளுமன்றத்தில் கடந்த பிப்ரவரி மாதம் சொன்னார் பிரதமர் மோடி. ‘370 இடங்களை பா.ஜ.க. மட்டும் தனித்து கைப்பற்றும்’ என்றும் சொன்னார் பிரதமர் மோடி. அப்படி வென்று காட்டி இருக்கிறாரா? பா.ஜ.க. 370 இடங்களைப் பெறவில்லை. 240 இடங்களைத் தான் பெற்றுள்ளது. பெரும்பான்மையை நிரூபிக்க 272 இடங்கள் இருக்க வேண்டும். அதற்கே 32 இடங்கள் தேவை. பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான 272 ஐ விட 100 இடங்கள் அதிகமாகப் பெறுவோம் என்று சொல்லிக் கொண்டார். அது நடக்கவில்லை. மக்கள் அவரை நிராகரித்துவிட்டதாகத் தானே பொருள்?

**‘பா.ஜ.க. கூட்டணியானது 400 இடங்களைப் பிடிக்கும்’ என்று சொன்னார் மோடி. இன்று பா.ஜ.க. கூட்டணியானது 292 இடங்களைத்தான் பிடிக்க முடிந்துள்ளது. 300 ஐ கூடத் தொட முடியவில்லை. மக்கள் அவரை நிராகரித்துவிட்டார்கள் என்று தானே பொருள்?**

ஒரிசா ஆந்திரா ஆகிய இரண்டு சட்டமன்றத் தேர்தலோடு சேர்த்து நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல் இருந்திருந்தால் அங்கும் நிலைமைகள் மாறி இருக்கும். மாநில ஆட்சியை மாற்ற நினைத்தவர் கோபம், நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலித்து விட்டது. பீகார் கர்நாடகாவில் பத்து இடங்கள் குறைந்திருந்தால் நிலைமை மாறி இருக்கும். 210 க்கு பா.ஜ.க. இறங்கி இருக்கும்.

370 இடங்களைக் கைப்பற்றி இந்திய ஜனநாயகக் கட்டமைப்பை நாசப்படுத்த நினைத்திருந்தார் மோடி. ‘400 கிடைத்தால் தான் நாம் நினைத்ததைச் செய்ய முடியும்’ என்று முழங்கினார் மோடி. ஒரே நாடு ஒரே தேர்தல் என்று சொல்லி சர்வாதிகாரத் தன்மை கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க நினைத்தார்.

**‘பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்று வோம்’ என்று பா.ஜ.க. எம்.பி. இந்த தேர்தலில் பரப்புரை செய்தார். “400 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்று பிரதமர் மோடி ஏன் சொல்கிறார் என்றால், அரசியலமைப்பு சட்டத்தை நாம் மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான்” என்று பா.ஜ.க. எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான அனந்த குமார் சொன்னார். அது எதையும் செய்ய முடியாத வகையில் மோடியை நிராகரித்துள்ளார்களே மக்கள்!**

தேர்தலுக்கு முன்னதாக கடவுளின் அவதாரமாக தன்னைக் காட்டிக் கொண்டவர், தேர்தல் முடிந்ததும் ‘கூட்டணிக் குழந்தையாக’ மாறினாரே ஏன்?

“மக்களவைத் தேர்தலில் அடைந்த வெற்றிக்காக தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றாரே ஏன்? மக்கள் நிராகரித்தது தானே?!

**மோடி சொந்த பலத்தால் பிரதமராக இருக்கவில்லை. நிதிஷ்குமார், சந்திரபாபு ஆகிய இருவரது தயவால்தான் பிரதமராக இருக்கிறார். அதனை உணர்ந்து சவால் விட வேண்டும்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2024) ”ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்து வருவதால், பூக்கடை பேருந்து நிலையம் அருகிலுள்ள கழிவுநீர்உந்து நிலையத்திற்கு நேரில் சென்று, மழைநீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னைப் பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள

# நிவாரண முகாம்களில் 2 லட்சத்து 32 ஆயிரத்து 200 பொதுமக்களுக்கு உணவு!

## மழை – வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டு – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தகவல்!

**சென்னை, டிச.2-**

**சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண மையங்களில் நேற்று முன்தினம் 2,32,200 பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2024) சென்னை பெருநகர மாநகராட்சி வளாகத்தில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் (ICCC) மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

இந்த ஆய்விற்குப் பின் துணை முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

வங்கக் கடலில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு உருவான ஃபெங்கல் புயல் புதுச்சேரி காரைக்கால் இடையே இன்று பலத்த காற்றுடன் கரையை கடக்கும் என இந்தியா வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கின்றது. இதன் காரணமாக இன்றைக்கு சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நேற்று நள்ளிரவில் இருந்து மழை அதிகமாக பெய்து வருகிறது.

சென்னையில் இன்று காலை 7 மணி முதல் தற்போது 2 மணி வரை சராசரியாக 110 மில்லி மீட்டர் அளவிற்கு மழை பெய்திருக்கிறது. இந்த சூழலை எதிர்கொள்ள, முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. புயல் மழையால் மக்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று போர்க்கால அடிப்படையில் அனைத்து விதமான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னையைப் பொறுத்தவரை, தற்போது பெய்த மழையின் காரணமாக 334 இடங்களில் நீர்த்தேக்கம் ஏற்பட்டுள்ளது. அதில், 12 இடங்களில் மழை நீர் வெளியேற்றப்பட்டுள்ளது.

மீதமுள்ள இடங்களில் போர்க்கால அடிப்படையில் மழை நீரை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மழைநீர் தேங்கும் இடங்களில் அதனை வெளியேற்றும் வகையில் 1,700 மோட்டார் பம்புகள் பயன்பாட்டில் இருக்கின்றன.

இன்று மதியம் 1.00 மணி வரை மழையின், காற்றின் காரணமாக விழுந்த 27 மரங்கள் விழுந்துள் ளன. 27 மரங்களும் உடனடியாக அகற்றப்பட்டுள்ளன. இதற்காக ஹைட் ராலிக் மர அறுவை எந்திரம், ஹைட்ராலிக் ஏணி என 500 எந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில், கணேச புரம் சுரங்கப்பா தையில் இரயில்வே மேம்பாலப் பணி காரணமாக தற்காலிகமாக போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சுரங்கப்பாதைகளில் 6 சுரங்கப் பாதைகள் தற்போது மூடப்பட்டுள்ளன. இந்த சுரங்க பாதைகளில் மோட்டர் பம்ப் வைத்து அங்குள்ள நீரை அகற்றும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 329 இடங்களில் நிவாரண மையங்களில் உணவு, சுகாதார வசதி, குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளன. நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 120 சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. இதுவரை தாழ்வான பகுதிகளில் இருந்து 193 நபர்கள் அழைத்து வரப்பட்டு 8 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று (30.11.2024) காலை உணவு 8,500 நபர்களுக்கும், மதிய உணவு 2,23,700 நபர்களுக்கும் என மொத்தம் 2,32,200 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சென்னை



யில் உள்ள 386 அம்மா உணவகங்களிலும் இன்று இலவசமாக உணவு வழங்கப்பட்டு வருகிறது.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங்களில் தங்க வைப்பதற்காக 103 படகுகள் தயார் நிலையில் உள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியில் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேர் மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மழை வெள்ள களப்பணியில் ஈடுபட தன்னார்வலர்களும் ஆர்வத்துடன் முன்வந்து, அவர்களின் தகவல்களை மாநகராட்சியுடன் பதிவு செய்துள்ளனர். கழிவு நீர் அகற்றம் மற்றும் பாதாள சாக்கடை அடைப்பு உள்ளிட்டவை சரி செய்யும் பணியில் சென்னை குடிநீர் வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பாதாள சாக்கடைகளில் அடைப்புகளை சீர் செய்வதற்கு 524 ஜெட்ராடிங் மற்றும் டீசில்டிங் இயந்திரங்கள் பயன்பாட்டில் இயங்கி வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் IAS அதிகாரிகள் தலைமையிலான குழுக்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தவிர, மாநகராட்சி பகுதியில் மண்டல அளவில் கண்காணிப்பு அலுவலர்கள், தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன் களப்பணியாளர்கள் மட்டுமன்றி, கழக செயல் வீரர்களும் களத்தில் பணியாற்றி வருகின்றனர். முதலமைச்சர் தலைமை யிலான அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரி க்கைப் பணிகள் காரணமாக பெருமளவு பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

புயல் இன்னும் கரையைக் கடக்காத நிலையில், (இன்று நள்ளிரவு கரையை கடக்கும் என்று சொல்லியுள்ளார்கள்) எந்தவித சூழலையும் எதிர்கொள்ள நம்முடைய அரசு தயாராக உள்ளது. ஆகையால், பொதுமக்கள் அச்சமும் பதட்டமும் அடையத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்களும் கிடைக்கின்ற வகையில் அரசு முழுமையாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து இருக்கின்றது. இந்த நேரத்தில் பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியே செல்வதைத் தவிர்த்து, பாதுகாப்புடன் வீட்டில் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், ஃபெங்கல் புயலை எதிர்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த காலங்களில் இயற்கை சீற்றங்களின் போது, ஒற்றுமையுடன் செயல்பட்டு, மீண்டு வந்திருக்கிறோம். அதே போல, இப்போதும் ஒற்றுமையோடு செய ல்படுவோம், மீண்டு வருவோம். பொறுப்போடும் – விழிப்புணர் வோடும் செயல்பட்டு இந்த இடையூரையும் வென்றிடுவோம் என்று கேட்டுக்கொள்கி றேன்.

**கேள்வி** : மழைநீர் தேங்கியிருக்கக் கூடிய சில இடங்களில் அகற்றப்படுவதற்கு எவ்வளவு நேரம் ஆகும், கே.கே.நகர் பாரதிதாசன் சாலை, ஜி.என்.செட்டி ரோடு ஆகிய இடங்களில் 3 மணி நேரத்திற்கும் மேலாக தண்ணீர் நின்று கொண்டுள்ளது.

**பதில்** : தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. அரை மணிநேரம், ஒரு மணி மழை நின்றால் தானாகவே நீர் வடிந்து விடும். மழை நீர் தேங்கியுள்ள அனத்து பகுதிகளிலும், மோட்டார் பம்ப்கள் மூலமாக மழை நீரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**கேள்வி** : கடந்த முறை, தியாகராய நகர், கோடம்பாக்கம் தண்ணீர் தேங்கியது, இந்த முறை, தேங்காமல் இருக்க என்ன மாதிரி முன்னெச்சரிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பதில்** : எல்லா இடத்திலேயும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். மாநகராட்சி சார்பாக கால்வாய்களில் வண்டல் மற்றும் கழிவுகள் அகற்றும் பணிகள், ஆகாயத் தாமரை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த காரணங்களால்தான் மழை அதிகம் பெய்தபோதும், பாதிப்பு குறைவாக உள்ளது. சில இடங்களில் தேங்கியுள்ள தண்ணீரும் அரை மணிநேரம் மழை நின்றால் வடிந்து விடும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் 27 ஆம் தேதி பிறந்த 34 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசு பெட்டகத்தை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்கள் பொன் முத்துராமலிங்கம், பெ.குழந்தைவேலு, மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சௌந்தரராஜன், மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். உடன் அரசு மருத்துவமனை முதல்வர் அருள் சுந்தரேஸ் குமார், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அய்யப்பன், தினேஷ்குமார், அன்புச்செல்வன், தமிழ் சந்திரன், சுந்தரேஸ்வரன், பகுதி செயலாளர் புண்ணியமூர்த்தி, வட்டச் செயலாளர் பாக்யராஜ் என்ற ராஜேஷ், மருத்துவ அணி திலகவதி ஜெயராஜ் மற்றும் திமுக இளைஞரணி நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்



சாத்தூரில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றது. இந்தப் போட்டியினை விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் கேக் வெட்டி, கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்தார். இந்த விளையாட்டுப் போட்டியில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து அணிகள் கலந்து கொண்டனர். இதில் வெற்றி பெற்ற முதல் மூன்று அணிகளுக்கு தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ் பரிசு தொகை மற்றும் கோப்பைகளை வழங்கினார். இதில் ஒன்றியச் செயலாளர்கள் கடற்கரைராஜ், முருகேசன், நகர மன்ற தலைவர் குருசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வினோத்குமார், மாவட்ட, நகர, ஒன்றிய விளையாட்டு அணி, இளைஞர் அணி, மாணவர் அணி, கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.